**கவனிக்க.-** *23.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1752 - 2012 මාර්තු මස 30 වැනි සිකුරාදා - 2012.03.30

*1752 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 752 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 760 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் — வெற்றிடம்

## நீர்கொழும்பு மாநகர சபை

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாண மாகாண சபையினுள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய (12 " × 8" அளவினதான) விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து 2012.04.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை, நீர்கொழும்பு'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை சேவையாற்றும் தலைவர்மூலம் அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | தீயணைக்கும் சேவையின் மோட்டார் தொழில்நுட்ப தீ அணைப்பாளர் | 04 | மாதாந்தம் ரூபா 14,280- 145 × 7 - 180 × 10 -240 × 17 - ரூபா 21,175 ஆர்எஸ்-1-2006ஏ<br><br>ஐந்தாவது படிநிலை ஆரம்ப படிநிலையாகும். மூன்றாவது படிநிலைக்கு முன் வினைத் திறமைகாண் தடை உண்டு | (குறிப்பு 01 ஐப் பார்க்கவும்) |
| 02 | தீயணைக்கும் சேவையின் தலைமை தீ அணைப்பாளர் | 06 | மாதாந்தம் ரூபா 15,850- 180 × 7 -240 × 2- 320 × 8 - 375 × 17 - ரூபா 26,525<br><br>ஆர்எஸ்-2-2006ஏ<br><br>மூன்றாவது படிநிலைக்கு படிநிலைக்கு முன் வினைத் திறமைகாண் தடை உண்டு | (குறிப்பு 02 ஐப் பார்க்கவும்) |
| 03 | தீயணைக்கும் சேவையின் நிலைய பொறுப்பு அலுவலர் | 02 | மாதாந்தம் ரூபா 15,850- 180 × 7 - 240 × 2 - 320 × 8 - 375 × 17- ரூபா 26,525<br><br>ஆர்எஸ்-1-2006ஏ<br><br>ஐந்தாவது படிநிலை ஆரம்ப படிநிலையாகும். மூன்றாவது படிநிலைக்கு முன் வினைத் திறமைகாண் தடை உண்டு | (குறிப்பு 03 ஐப் பார்க்கவும்) |

**குறிப்பு 1.- ''தீ அணைப்புச் சேவையின் மோட்டார் தொழில்நுட்ப தீ அணைப்பாளர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :**

(i) அரச சேவையில் மாகாண அரச சேவையில், அரச கூட்டுத்தாபன சேவையில் நிரந்தர பதவி வகிப்பவராக ஆகக் குறைந்தது 4 ஆவது வருட சேவைக்காலத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(ii) பார வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும் ;

(iii) பார வாகனம் ஓட்டுவதில் ஆகக்குறைந்தது 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ;

(iv) மேல் மாகாணத்திற்குரிய உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அவ் உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிறுவனமொன்றின்மூலம் நடாத்தப்படுகின்ற உரிய தொழில் பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

(v) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் மேல் மாகாணத்திற்குரிய எல்லைகளுக்குள் 3 வருடங்களாவது நிரந்தர பதிவை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

***குறிப்பு 2.- "தீ அணைப்புச் சேவையின் தலைமைத் தீ அணைப்பாளர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :***

*அரச சேவையில், மாகாண அரச சேவையில், அரச கூட்டுத்தாபன சேவையில் நிரந்தர பதவி வகிக்கின்ற முதலாம் வகுப்பு தீ அணைப்பாளராக ஆகக்குறைந்தது 3 வருட திருப்திகரமான சேவைக்காலத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும் ;*

*மற்றும்*

மேல் மாகாணத்திற்குரிய உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அவ் உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிறுவனமொன்றின்மூலம் நடாத்தப்படுகின்ற உரிய தொழில் பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

*மற்றும்*

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் மேல் மாகாணத்திற்குரிய எல்லைகளுக்குள் 3 வருடங்களாவது நிரந்தர பதிவை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

***குறிப்பு 3.- "தீ அணைப்புச் சேவையின் நிலைய பொறுப்பு அலுவலர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :***

*மாகாண அரச சேவையில் தீ அணைப்பு அலுவல்களில் 10 வருடத்திற்குக் குறையாத அனுபவமிருத்தல் வேண்டும். இதில் 3 வருடங்களுக்குக் குறையாத காலஎல்லையைக் கொண்ட நிரந்தர பதவி வகிக்கின்ற தலைமை தீ அணைப்பாளராக திருப்திகரமான சேவைக்காலத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும் ;*

*மற்றும்*

மேல் மாகாணத்திற்குரிய உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அவ் உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிறுவனமொன்றின்மூலம் நடாத்தப்படுகின்ற உரிய தொழில் பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

*மற்றும்*

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் மேல் மாகாணத்திற்குரிய எல்லைகளுக்குள் 3 வருடங்களாவது நிரந்தர பதிவை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும்**.- (அ) இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/ தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்துதல் வேண்டும் ;

(ஆ) இலங்கை தாபனக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் மேல் மாகாண மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் அமுலாக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் உரிய உள்ளூராட்சி நிறுவனத் தலைவரின் கட்டளைகளுக்கும் அமைய ஒழுகுதல் வேண்டும். இப்பதவிகளின் சேவை மேல் மாகாணத்திற்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். இக்காலத்திற்குள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்குமாயின், நன்னடத்தை கால இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் 1 வருட பதிற் கடமையாற்றும் பதவியில் வைக்கப்படுவர்.

வயது.- தீ அணைப்புச் சேவையின் மோட்டார் தொழில்நுட்ப தீ அணைப்பாளர் பதவி மற்றும் தலைமை தீ அணைப்பாளர் பதவிக்காக-

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

தீ அணைப்புச் சேவையின் நிலைய பொறுப்பு அலுவலர் பதவிக்காக-

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 25 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

ஏனைய பொது நிபந்தனைகள்.- 1. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

2. விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும். இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்படும் ;

*3. தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;*

*4. அரச/மாகாண அரச சேவையில் வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராக இருத்தலும் கூடாது ;*

*5. எல்லா அலுவலர்களும் பதவிக்கு நியமிக்கப்பட்டு 5 ஆண்டிற்குள் இரண்டாம் அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.*

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.**- *பொது நிருவாக சுற்றறிக்கை இல. 15/ 90 இற்கமைய எழுத்துமூல தொழிற்பரீட்சை ஒன்று நடாத்தப்படும் அதில் திறமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியபின்னர் வெற்றிடங்களுக்கேற்ப ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.*

**எழுத்துமூலப்பரீட்சை.**- *(1) தீ அணைப்புச் சேவையின் மோட்டார் தொழில்நுட்ப தீ அணைப்பாளர் பதவிக்காக 1 மணித்தியால வினாத்தாளுக்கு தோற்றுதல் வேண்டும் :-*

(i) *விஞ்ஞானம்*
(ii) *தொழில்நுட்பவியல்*

*(2) தீ அணைப்புச் சேவையின் தலைமை தீ அணைப்பாளர் பதவிக்காக 1 1/2 மணித்தியால வினாத்தாளுக்கு தோற்றுதல் வேண்டும் :-*

(i) *விஞ்ஞானம்*
(ii) *தொழில்நுட்பவியல்*
(iii) *அபாயகரமான பொருட்கள்*
(iv) *கட்டளையும் தலைமைத்துவமும்*

*(3) தீ அணைப்புச் சேவையின் நிலைய பொறுப்பு அலுவலர் பதவிக்காக*

(i) *விஞ்ஞானம்*
(ii) *தொழில்நுட்பவியல்*
(iii) *அபாயகரமான பொருட்கள்*
(iv) *கட்டளையும் தலைமைத்துவமும்*
(v) *நிலைய நிருவாகமும் முகாமைத்துவமும்*

*மாநகர ஆணையாளர்,*
*நீர்கொழும்பு மாநகர சபை.*

*நீர்கொழும்பு மாநகர சபை,*
*நீர்கொழும்பு.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

| |
|---|
| |

*(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)*

**நீர்கொழும்பு மாநகர சபை**

*........................................... பதவி*

*1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.*

*2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.*

*3. தற்போது சேவையாற்றும் நிறுவனம் மற்றும் பதவி :-----.*

*4. சேவைக்காலம் (பதவிக்குரியவற்றை வெவ்வேறாக தரவும்) :-----.*

*5. தேசிய அடையாள அட்டை இல. :-----.*

*6. நிரந்தர விலாசம் :-----.*

*7. தபால் விலாசம் :-----.*

*8. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----.*

*9. நிரந்தரமாக வசிக்கும் காலம் :----- இருந்து ----- வரை*

*10. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :-----.*

11. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான அதிகார பிரதேசம் :-----.

12. பிறந்த திகதி :-----.

13. 2012.04.30 ஆந் திகதியன்று வயது :-----.

14. கல்வித் தகைமைகள் :-----.

15. பார வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் பற்றிய விபரம் :-----.

16. அனுபவம் :-----.

17. பதவிக்குரிய தொழில் பாடநெறி பற்றிய விபரம் :-----.

18. ஏனைய தகைமைகள் :-----.

19. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டீரா? :-----.

20. மேல் மாகாணத்திற்குள் கடந்த 3 வருடங்கள் வசித்தது பற்றிய விபரம் :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.....................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் பதவி வகிப்பாராயின், திணைக்களத்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ...................................................................................... தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

.....................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்).
திகதி :-----.

3-1008/ 1

---

**நீர்கொழும்பு மாநகர சபை**

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாண மாகாண சபையினுள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய (12 " × 8"அளவினதான) விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து 2012.04.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை, நீர்கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை சேவையாற்றும் தலைவர்மூலம் அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வியாபார நிலைய மேற்பார்வையாளர் (தரம் II) | 02 | எம்என் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 13,120.<br><br>நான்காவது படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. | (குறிப்பு 01 ஐப் பார்க்கவும்) |

***குறிப்பு 1.- வியாபார நிலைய மேற்பார்வையாளர் பதவிக்காக பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள் :***

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) நல்ல உடற்கட்டுடையவராகவும் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நன்கு உரையாடக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும்** : (அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ஆ) விதவைகள்/தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்துதல் வேண்டும் ;

(இ) இப்பதவிக்கு நியமனம்பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். இக்காலத்திற்குள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்குமாயின், நன்னடத்தை கால இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் 1 வருட பதிற் கடமையாற்றும் பதவியில் வைக்கப்படுவர்.

***ஏனைய பொது நிபந்தனைகள்.-*** (1). விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

(2). விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3). விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும் ; இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்படும் ;

(4). தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

(5). அரச/மாகாண அரச சேவையில் வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராக இருத்தலும் கூடாது ;

(6). எல்லா அலுவலர்களும் பதவிக்கு நியமிக்கப்பட்டு 5 ஆண்டிற்குள் இரண்டாம் அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

***ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.-*** பொது நிருவாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கமைய எழுத்துமூல தொழிற் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு அதன் திறமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய பின்னர் வெற்றிடங்களுக்கேற்ப ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**நீர்கொழும்பு மாநகர சபை**

........................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.

3. தற்போது சேவையாற்றும் நிறுவனம் மற்றும் பதவி :-----.

4. சேவைக்காலம் (பதவிக்குரியவற்றை வெவ்வேறாக தரவும்) :-----.

5. தேசிய அடையாள அட்டை இல. :-----.

6. நிரந்தர விலாசம் :-----.

7. தபால் விலாசம் :-----.

8. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----.

9. நிரந்தரமாக வசிக்கும் காலம் :----- இருந்து ----- வரை

10. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :-----.

11. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான அதிகார பிரதேசம் :-----.

12. பிறந்த திகதி :-----.

13. 2012.04.30 ஆந் திகதியன்று வயது :-----.

14. கல்வித் தகைமைகள் :-----.

15. பார வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் பற்றிய விபரம் :-----.

16. அனுபவம் :-----.

17. பதவிக்குரிய தொழில் பாடநெறி பற்றிய விபரம் :-----.

18. ஏனைய தகைமைகள் :-----.

19. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டீரா? :-----.

20. மேல் மாகாணத்திற்குள் கடந்த 3 வருடங்கள் வசித்தது பற்றிய விபரம் :-----.

இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்கள், எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் பதவி வகிப்பாராயின், திணைக்களத்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ..................................................................................... தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

.......................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்).
திகதி :-----.

3-1008/ 2

---

**கட்டுநாயக்க சீதுவை நகர சபை**

பதவிகள் வெற்றிடம்

மேல் மாகாண அரசாங்க சேவையின் கட்டுநாயக்க சீதுவை நகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள 8 சுகாதாரத் தொழிலாளி அ. ஊ. சே. வகுப்பு III பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள மேல் மாகாண மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் நிரந்தர வசிப்பாளர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 2012.04.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''செயலாளர், கட்டுநாயக்க சீதுவை நகர சபை, சீதுவை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''சுகாதாரத் தொழிலாளி பதவிக்காக விண்ணப்பம்'' குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள் போன்றே குறித்த திகதிக்குப்பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

3. **கல்வி தகைமைகள்**.- கல்வி தகைமைகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

4. வயதெல்லை.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச/ மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

5. **பொது தகைமைகள்** : (i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக வேண்டும் ;

(iii) விண்ணப்பம் கோரும் திகதியன்று மேல்மாகாணத்தில் தொடர்ந்து 3 வருட நிரந்தர வசிப்பாளராகவிருத்தல் வேண்டும் ;

(iv) தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராகவோ அல்லது அரச/ மாகாண அரச சேவையில் வெளியேற்றப்பட்டவராகவோ அல்லது மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராகவோ இருத்தல் கூடாது ;

(v) இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்படும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் நியதிகள்**.- தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 24/95 இற்கமைய நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையின்மீது ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

7. **சேவையில் நியமிப்பதற்கான நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் 3 வருட கால நன்னடத்தை காலப்பகுதிக்கு ஆட்பட்டவர் ஆவர் ;

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 6/ 2006 இன் பீஎல் 1-2006 இன் பிரகாரம் ரூபா 11,730-10×120 - 10 × 130 - 10×145-12×160 - ரூபா 17,600 சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப சம்பள நிலையான ரூபா 11,730 இல் அமர்த்தப்படுவதுடன் 04 ஆம் படிநிலையில் வருவதற்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு ;

(iii) விதவைகள்/தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(iv) நியமனஞ்செய்யப்பட்டோர் மூன்று வருட நன்னடத்தை காலத்திற்கு ஆட்பட்டவர் ஆவர். இக்காலப்பகுதியினுள் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருப்பின் நன்னடத்தை கால இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச/அரச மாகாண சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றுவதற்கு உட்பட்டு நியமனஞ் செய்யப் படுவர். காலத்திற்கு பதிற் கடமையாற்றுவதற்கு உட்பட்டு நியமனஞ் செய்யப்படுவர்.

8. விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளை தங்கள் விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும்பொருட்டு பிரதேச செயலாளரின் சான்றிதழ்.

எம். டி. எஸ். பிரசாதினி,
செயலாளர்,
கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.

12.03.2012.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டுநாயக்க சீதுவை நகர சபை**

சுகாதாரத் தொழிலாளி பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.

2. தேசிய அடையாள அட்டை :-----.

3.(அ) நிரந்தர விலாசம் :-----.
தொலைபேசி :-----.

(ஆ) அலுவலக விலாசம் :-----.
தொலைபேசி :-----.

(இ) (i) பிறந்த திகதி : ஆண்டு : -----, மாதம் :----, திகதி :-----.
(ii) 30.04.2012 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : -----, மாதங்கள் :----, நாட்கள் :-----.

4. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----. பிரதேச செயலாளர் பிரிவு :-----.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.

6. பால் (ஆண்/பெண்) :-----.

7. கல்வித் தகைமைகள் :-----.

8. தொழிற்றகைமைகள் மற்றும் அனுபவம் :-----.

9. நீர் இதற்கு முன் அரச பதவி வகித்துள்ளீரா? ஆமெனில், விபரம் தருக :-----.

இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்கள், எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்து கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**(திணைக்களத்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்)**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ................................................ தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். அவரின் சேவையும் நடத்தையும் திருப்திகரமானதெனவும் அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

.......................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :-----.

3-1058

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## குருணாகல் மாநகரசபை

*சொத்து குத்தகை - 2012*

*மாநகர சபை உரிமைக் கட்டளைச் சட்டத்தில் 230 ஆம் பிரிவின்கீழ் (252 ஆம் அதிகாரம்) மற்றும் அந்த பிரிவில் குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்கு உரிமை விடுவதற்குட்பட்டு குருணாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் உள்ள காணிகள், கட்டிடங்கள் மற்றும் இருப்பிடங்களுக்கு வருடாந்த பெறுமதிகளில் 2012 இல் காலாண்டு நான்கிற்காக 7% வரி விதிப்பதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் கீழ்க்காணப்படுமாறு திருத்தப்பட்டுள்ளது பற்றி தயவாய் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது :*

1. *முதலாவது காலாண்டு 7% ;*
2. *2, 3, 4 காலாண்டு 4%.*

*இந்த வரி முறை தொடர்பாக 2012 ஆம் வருடத்தில் 2, 3, 4 ஆம் காலாண்டிற்காக யூன் மாதம் 30, செத்தெம்பர் மாதம் 30 மற்றும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் செலுத்த வேண்டும்.*

*இன்னும் 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கத்திற்கான மாநகரசபை (திருத்த) சட்டத்தின் மாநகர சபை உரிமைக் கட்டளைச் சட்டத்தின் 230 ஆம் மற்றும் 255 ஆம் பிரிவுகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள்படி, 2012 ஆம் வருடத்தில் 2, 3, 4 ஆம் காலாண்டிற்காக எல்லா காலாண்டிற்காக செலுத்தவேண்டிய மொத்த வரிப்பண வரி உரிய காலாண்டில் முதலாவது மாதத்தினுள் செலுத்துவதாயின் அந்த காலாண்டில் வரிப்பண வரியில் நூற்றுக்கு ஐந்து (5%) வீதக் கழிவு வழங்கப்படுவதுடன், உரிய திகதிகளின்பின் செலுத்தப்படும் வரிப்பண வரிக்காக கீழ்க்காணப்படும் வண்ணம் உத்தரவாதக் கட்டணம் அறவிடப்படுவது பற்றி மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது :-*

| | |
|---|---|
| * இருப்பிடங்களில் மற்றும் தரிசு நிலங்களில் | - 15% |
| * தரிசு நிலம் மற்றும் இருப்பிடம் அற்ற மற்றைய எல்லா இடங்களினாலும் | - 20% |
| * அபிவிருத்தி செய்யப்படாத காணிகளினால் | - 20% |

*உங்களால் தற்போது காலாண்டு நான்கிற்காக 7% நூற்றுக்கு வீதப்படி வரிப்பணம் வரி செலுத்தியிருப்பின் மேலதிக தொகை 2013 ஆம் வருடத்திற்கு பிரதியீடு செய்யப்படும்.*

*ஜீ. கே. எஸ். சுந்திரலதா,*
*மாநகர ஆணையாளர்,*
*குருணாகல் மாநகர சபை.*

*2012.03.02.*

*3-984*

---

## குருநாகல் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 127 ஆவது வாக்கியத்தின் கீழ் அறிவிக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆவது வாக்கியத்துடன் வாசிக்க வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்தையுடைய பொது மயானம் மற்றும் தனியாள் மயானம் சம்பந்தமாக, சட்டத்தின் முதலாவது பந்தியின் 4 ஆம் வாக்கியத்தின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் பிரதேச சபை மூலம் கீழ்வரும் உப அறிக்கை வரையுள்ள பொது மயான பூமி குருநாகல் பிரதேச சபைக்குரிய மயான பூமி என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.*

*தற்போது பிரதேச சபை மூலம் அளந்து அடையாளப்படுத்தப்பட்டுள்ள இம்மயான பூமி சம்பந்தமாக குறிப்பிட்ட காணியின் உரிமையாளர் என உரிமை கூறும் ஆள் மூலம் ஏதேனும் எதிர்ப்புக்கள் வரின் இவ் அறிவித்தலிலிருந்து ஒரு மாதத்திற்குள் தம்முடைய உரிமையை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆவது வாக்கியத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.*

*தேசபந்து பெட்றிக் கருணாசிங்க,*
*தலைவர்,*
*குருநாகல் பிரதேச சபை.*

*குருநாகல் பிரதேச சபை,*
*மல்பிடிய போயனே,*
*2012, மார்ச்சு 12.*

**உப அறிக்கை**

| மயானத்தின் பெயர் | அமைவிடம் | வரைபடத்தின் இலக்கம்/திகதி | காணியின் அளவு | எல்லை |
|---|---|---|---|---|
| 1 மரலுவாவ பாபர்வத்த பொது மயானம் | மரலுவாவ | 2014/2007.09.04 | 0ஏ.03றூ. 1பே. | வடக்கிற்கு : டீ. எஸ். தீ சில்வா மற்றும் ஏனையோர் உரிமை கூறும் பாபர்வத்த<br>தெற்கிற்கு : பி. வ. கு/1638 காணித்துண்டு இல. 02<br>கிழக்கிற்கு : புகையிரத பாதையும் பாதுகாப்பும் பி.வ. 2269<br>மேற்கிற்கு : பி. வ. கு/1638 காணித்துண்டு இல. 12/2 |
| 2 போகிடியவத்த பொது மயானம் | நைலிய | 86/2008/ 2008.03.18 | 0ஏ.02றூ.7.6பே. | வடக்கிற்கு : கிராமத்தின் மத்தியிலுள்ள பாதை<br>தெற்கிற்கு : ஆர். பீ. ஜயவர்தனயின் காணி<br>கிழக்கிற்கு : என்பீ. ஜயவர்தனயின் காணி<br>மேற்கிற்கு : ஜே. பீ. சந்திரசேகரயின் காணி |
| 3 உடதிகன பொது மயானம் | உடதிகன | 194/2009.09.17 | 0ஏ.02றூ. 8.48பே. | வடக்கிற்கு : எம். ஏ. சோமவதியின் காணி<br>தெற்கிற்கு : என். குணவர்தன மற்றும் எஸ். எம். நிமல் கருணாதிலக உரிமை கூறும் வயல்<br>கிழக்கிற்கு : சந்திரா ஹேரத் உரிமை கூறும் காணி<br>மேற்கிற்கு : என். குணவர்தன உரிமை கூறும் காணி |
| 4. அத்தனபிடிய பொது மயானம் | அத்தனபிடிய | 145/2010/ 2010.08.17 | 0ஏ. 01றூ. 16.1பே. | வடக்கிற்கு : எஸ். சோமபால உரிமை கூறும் காணி<br>தெற்கிற்கு : ஜி. சிரில் ரத்னாயக மற்றும் ஏனையோர் உரிமை கூறும் காணி<br>கிழக்கிற்கு : தென்னகோன் உடகெதர மற்றும் ஏனையோருக்கு உரிமையான காணி<br>மேற்கிற்கு : எஸ். சிரிசேன மற்றும் ஏனையோர் உரிமை கூறும் குடும்ப மயானம் |

3-1098

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.